**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 145 / 2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW13 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Muthukrishnan |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 14th day of October, 2025.

**(A1 to A3, A5, A6 are present. A4 absent, Petition filed and allowed)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை** :

நான் தற்போது பூந்தமல்லி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17/08/2022 அன்று T15, SRMC காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது ஆய்வாளர் அவர்கள் உத்திரவின் பேரில் நானும் மு.நி.கா. வேலாயுதம் என்பவரும் SRMC காவல் நிலைய குற்ற எண் 453/2022 வழக்கின்

எதிரிகளான சூர்யா (எ) சூர்யபிரகாஷ் வயது 22 த/பெ. வேலு என்பவரையும், கருப்பய்யா வயது 27, த/பெ. சின்னய்யா என்பவரையும் ஆண்மை தன்மை பரிசோதனைக்காக கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1. பூந்தமல்லி அவர்களின் D.No. 1166/2022 dated 16-08-2022 உத்தரவின் படி மேற்படி எதிரிகளை சென்னை புழல் மத்திய சிறையிலிருந்து அழைத்து வந்து சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தடய அறிவியல் துறை உதவி பேராசிரியர் டாக்டர் திரு. முரளிதரன் அவர்கள் முன்பாக சூர்யா (எ) சூர்யபிரகாஷ் என்பவரை காலை 10.30 மணிக்கு சோதனைக்கு ஆஜர் செய்து 11.25 மணிக்கு முடிக்கப்பட்டது. பின்னர் எதிரி கருப்பய்யா வயது 27, த/பெ. சின்னய்யா என்பரை 11.30 மணிக்கு சோதனைக்கு ஆஜர் செய்து 12.30 மணிக்கு முடிக்கப்பட்டது. சோதனை முடிந்தபின் இரு எதிரிகளையும் காவலர்களாக நாங்கள் இருவரும் சென்னை புழல் மத்திய சிறைக்கு எதிரிகளை கொண்டு சேர்ந்து பின்னர் நிலையத்தில் அறிக்கை செய்தோம். ஏ.சி. என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

SESSIONS CASE NO. 145 / 2023

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW14<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Yogeshwaran |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 14th day of October, 2025.

**(A1 to A3, A5, A6 are present. A4 absent, Petition filed and allowed)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை** :

நான் தற்போது திருவேற்காடு காவல் நிலையத்தில் மு.நி.கா. ஆக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது T15 SRMC காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வந்தேன். 17/08/2022 தேதி SRMC காவல் நிலைய குற்ற எண் 453/2022 வழக்கில் கண்ட எதிரிகள் சுபாஷ், சந்தோஷ்குமார் இருவரையும் கனம் பூந்தமல்லி

நீதித்துறை நடுவர் எண்1 பூந்தமல்லி அவர்களின் D.No. 1166/2022 dated 16-08-2022 உத்தரவின் படி கீழ்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு நானும், தலைமை காவலர் முருகன் அவர்களும் எதிரிகளை அழைத்து வந்து கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் தடயவியல் உதவி பேராசிரியர் திரு. ரவிக்குமார் அவர்களிடம் எதிரி சுபாஷ் என்பவரை 11.55 மணிக்கு அனுமதிக்கப்பட்டு பின்னர் சந்தோஷ்குமார் என்பவரை 12.15 மணிக்கு அனுமதிக்கப்பட்டும், பின்னர் மருத்துவ பரிசோதனை முடிந்து இரு எதிரிகளையும் புழல் சிறையில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தோம். என்னை ஏ.சி. அவர்கள் விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :

இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 145 / 2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW15<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Vasanthakrishnan |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 14th day of October, 2025.

**(A1 to A3, A5, A6 are present. A4 absent, Petition filed and allowed)**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u> :

**<u>முதல் விசாரணை</u>** :

நான் தற்போது தனி வட்டாட்சியர் பறக்கும்படை குடிமைபொருட்கள் விழுப்புரம் மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் எற்கனவே திண்டிவனம் வட்டம் வருவாய் வட்டாட்சியராக பணிபுரிந்தபோது 13.08.2022 அன்று சென்னை SRMC சரக காவல் உதவி ஆணையாளர் வேண்டுகோளின் பேரில் SRMC காவல் நிலைய குற்ற எண்

453/2022ல் பாதிக்கப்பட்ட திருமதி. கமலா க/பெ. பழனி என்பவரின் சாதி குறித்து அறிக்கை கோரியதன் பேரில் மயிலம் குறுவட்ட வருவாய் ஆய்வாளரின் விசாரணை அறிக்கையினை பெற்று பரிசீலனை செய்து 17.08.2022 அன்று திருமதி. கமலா க/பெ. பழனி என்பவர் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என அறிக்கை அளித்தேன். விசாரணை செய்தபோது வாக்குமூலம் அளித்தேன். கமலா என்பவரின் சாதி குறித்த மெய் தன்மை சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழின் நகல் **அ.த.சா.ஆ.11** வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :

எதன் அடிப்படையில் சாதி குறித்த மெய்தன்மை சான்றிதழ் வழங்கினேன் என்றால் மயிலம் குறுவட்ட வருவாய் ஆய்வாளரின் விசாரணை அறிக்கையின் படி வழங்கினேன். மேலும் அவருடைய மாமனார் மற்றும் மாமியார் அந்த கிராமத்தில் குடியிருந்தார்கள். வேறு ஏதாவது ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. வருவாய் ஆய்வாளர் எதன் அடிப்படையில் அறிக்கை வழங்கினார் என்றால் அவர்கள் ஆதிதிராவிடர் காலனியில் வசிக்கிறார்கள் என்றும் அவருடைய மாமனார் மற்றும் மாமியாரிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில் அறிக்கை வழங்கியது கூறினார். அவருடைய வாக்குமூலங்களை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் ஆவணங்களை சரிவர பார்வையிடாமல் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தவறாக சாதி குறித்த மெய்தன்மை சான்றிதழ் வழங்கினேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த ஆவணம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.